வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைத்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 50
பக்கங்கள் 12

கடி : 38
கதி : 77

சனிக்கிழமை 11 பெப்ரவரி 2023

தை 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

இந்திய அமைச்சர் குழு நேற்று மன்னார் பயணம்

மன்னார், பெப். 11

யாழ்ப்பாணக் கலாசார மையத்தைக் கையளிப் பதற்காக வருகைதந்துள்ள இந்திய அமைச்சர் எல்.முருகன் தலைமையிலான குழுவினர் மன் னாருக்கு நேற்றுப் பயணமொன்றை மேற் கொண்டுள்ளனர். »11

பாதுகாப்பற்ற

கிணற்றுக்குள் வீழ்ந்து குடும்பத்தலைவர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 11

கோண்டாவில் பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் தவறிவீழ்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சின்னத்துரை இரத் தினராசா (வயது - 78) என்பவரே உயிரிழந்த வராவார். »11

13ஆம் திருத்தம் தொடர்பில் தேரர்களுக்கு தெளிவில்லை

மனோ கணேசன் காட்டடம்

கொழும்பு, பெப். 11

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தேரர்களுக்குத் தெளி வில்லை. இதனால்தான் அவர்கள் 13ஆவது திருத்தத்தை எதிர்த் துப் போராட்டத்தில் ஈடு படுகின்றனர் - இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட் டணியின் தலைவரும் கொழும்பு »11

சுதந்திரதின எதிர்ப்பு

500 மீற்றருக்கு அப்பாலேயே போராட்டங்களை நடத்தலாம்!

நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாண மாநகரில் இன்று நடைபெறும் சுதந்திரதின விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்த சில ருக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இதே வேளை- நிகழ்வுகள் இடம்பெறும் இடங் »11

தேர்தல் பணிகள் தொடங்கியதால்

தேர்தலை நடத்த தடையேதுமில்லை

உயர்நீதிமன்றம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 11

தேர்தல் பணிகள் ஆரம்பித்துள்ளதால் தேர்தலை நடத்தத் தடையேது மில்லை. ஆதலால், உள்ளூராட்சிசபைத் தேர்தலைத் திட்டமிட்டபடி எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்துவதற்குத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடவேண்டிய அவசியம் இல்லை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. »11

கரைதுறைப்பற்று வேட்புமனு நிராகரிப்பு

தமிழரசுவின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி!

கொழும்பு, பெப். 11

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலுக்காக தமிழரசுக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், அந்தத் தீர்மானத்தை இரத்துச் செய்யக்கோரி தமிழரசுக் கட்சியால் உயர்நீதிமன்றத்தில் தாக் கல்செய்யப்பட்ட ரிட்மனு தள்ளுபடி »11

உள்ளூராட்சித் தேர்தல்

தடைகோரிய மனுமீது 23இல் விசாரணைகள்

கொழும்பு, பெப். 11

உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் தொடர்பு டைய அனைத்துச் செயற்பாடுகளையும் இடை நிறுத்தி உத்தரவிடுமாறுகோரி ஒய்வுபெற்ற இரா ணுவ கேணல் டபிள்யூ.எம்.ஆர்.விஜேசுந்தர தாக்கல் செய்த எழுத்தாணை மனுமீதான விசா ரணை எதிர்வரும் 23ஆம் திகதி வரை »11

சுதந்திரதினக் கொண்டாட்டம் போராட மாணவர்கள் முடிவு!

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணத்தில் சுதந்திரதினக் கொண்டாட் டங்கள் இன்று இடம்பெறவுள்ள நிலையில், இந்தக் கொண்டாட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரி வித்து போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள் ளது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். »11

ரணிலுக்கு எதிராக முன்னணி போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணிலின் பங்கேற் புடன் இன்று இடம்பெறவுள்ள சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கு எதிராக, போராட வரு மாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. »11

கலாசார மண்டப விவகாரம்;

நிகழ்வை புறக்கணிப்பதா? இல்லையா? மாநகரசபை இன்று காலையே முடிவு!

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாண கலாசார் மண்டப கையளிப்பு நிகழ்வு இன்று இடம் பெறவுள்ள நிலையில், இந்த விழாவைப் புறக்கணிப்பதா? அல்லது கலந்துகொள்வதா? என்பது தொடர்பில் மாநகர சபை இன்று காலை முடிவெடுக் கும் என்று தெரியவருகின்றது. இந்திய அரசால் 100 கோடி ரூபா செலவில் (இந்திய மதிப் பில்) அமைக்கப்பட்ட யாழ்ப் பாணக் கலாசார நிலையம் இன்றையதினம் பொதுமக்க ளின் பாவனைக்காகக் கையளிக் கப்படவுள்ளது. இந்தக் கலா சார மத்திய நிலையத்தின் நிர் வாகம் யாரிடம் இருக்கும் என்பது தொடர்பில் இன்னமும் கொழும்புக்கும், யாழ்ப்பாணம் மாநகரசபைக்கும் »12

சுற்றுலாவை மையப்படுத்தி வடக்கில் அபிவிருத்திகள்!

இன்னும் 10 வருடங்களில் நடக்குமாம் யாழில் வைத்து ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 11

வடமாகாணத்தில் சுற்றுலாவை மையப்படுத்திய அபிவிருத்தி கள் இன்னும் 10 வருடங்க ளில் முன்னெடுக்கப்படும் - என்று தெரிவித்தார் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க. வடக்கில் அபிவிருத்தி »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 ஐ நடைமுறைப்படுத்தினால்

வடக்கின் பொலிஸுக்கும் இராணுவத்துக்கும் போர்

கம்மன்பில கற்பனைக் கதை

கொழும்பு, பெப். 11

13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் நாட்டில் மீண்டும் குருதி ஆறு ஓடும் அபாயம் காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சர்வகட்சி மாநாட்டின்போது ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். காணி அதிகாரங்களை வழங்க வேண்டாம் எனக்கூறுகிறார்கள். ஆனால், காணி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டு விட்டன. மாகாணசபையின் அமைச்சராக நான் கடமையாற்றியமையால், எனக்கு இந்த விடயம் தொடர்பாக நன்கு தெரியும். காணியொன்றை குத்தகைக்கு விடும் மற்றும் அரச காணிகளை நிர்வகிக்கும் அனைத்து அதிகாரங்களும் மாகாணசபைகளுக்குத்தான் உள்ளன. அத்தோடு, ஜனாதிபதி, ஒரு காணியை பரிசாக வழங்க வேண்டும் என்றாலும், விற்க வேண்டும் என்றாலும், மாகாணசபையின் ஆலோசனைக்கு அமைவாகவே அதனைச் செய்ய வேண்டும். காணி அதிகாரம் தொடர்பாக 13 இல், தற்போது மிச்சம் உள்ள விடயம் என்னவெனில், தேசிய காணி ஆணைக்குழுவொன்றை உருவாக்குவது மட்டும்தான். அப்படியானால், உண்மையில் நடைமுறைப்படுத்தப்படாத அதிகாரங்கள் தான் என்ன?

அந்தவகையில், வடக்கு கிழக்கை இணைத்தல் அல்லது இந்த மாகாணங்களுக்கான தனியான மாகாணசபையொன்றை உருவாக்குதல் மட்டும்தான் எஞ்சியுள்ளன.

எமது அரசமைப்பில் இரண்டு அல்லது மூன்று மாகாணசபைகளை இணைத்து ஒரு மாகாணசபையை உருவாக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. 1987 இல், அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியே வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டன. அந்தச் சட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதோடு, வடக்கு - கிழக்கு மாகாணசபை முறைமையும் முடிவுக்கு வந்துவிட்டதாக உயர் நீதிமன்றம் அறிவித்தது. இந்த நிலையில், 13 ஐ மீண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதானது வடக்கையும் கிழக்கையும் இணைக்க வழிவகை செய்துவிடும். ஏனெனில், எமது அரசமைப்பில் இதற்கான ஏற்பாடுகள் அப்படியேதான் உள்ளன. கிழக்கிலுள்ள பெரும்பான்மையான முஸ்லிம்கள் இதனை விரும்புவார்களா? அப்படியில்லாவிட்டால், அரசமைப்பில் உள்ள 54 ஆவது உறுப்புரையின், அ பிரிவின் 3 ஆவது சரத்தை முற்றாக நீக்கிவிட்டு பேச்சுக்கு வர வேண்டும். அதற்கு நாம் தயார்.

அதேநேரம், தமிழ் பிரிவினைவாதிகள் இலங்கையில் தோற்கடிக்கப்பட்டாலும், இலங்கைக்கு வெளியே தனி ஈழ அரசாங்கம் அவர்களால் உருவாக்கப்பட்டுவிட்டது. அவர்கள், இலங்கையின் தனி ஈழத்தை உருவாக்க சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைக் கோரி வருகிறார்கள்.

கிழக்கு திமோர், பாலஸ்தீனம் என்பவற்றில் நிலம் இல்லாத அரசாங்கம் தான் இன்றும் இருந்து வருகிறது. இதேபோன்றுதான், தமிழ் ஈழ அரசாங்கத்தின் பயணமும் அமைந்துள்ளது.

பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால், உத்தியோகபூர்வமல்லாத ஓர் இராணுவக்கட்டமைப்பு உருவாகிவிடும். சி.வி. விக்னேஸ்வரன் போன்ற பிரிவினைவாதிகள் வடக்கில் முதலமைச்சரானால், தனி ஈழத்துக்கான போர், இலங்கை இராணுவத்துக்கும் வடக்கின் பொலிஸாருக்கும் இடையில்தான் ஏற்படும்.

இது 30 ஆயிரம் இராணுவத்தினரின் தியாகத்தை இல்லாது செய்து, மீண்டும் நாட்டில் குருதி ஆறு ஓடவைக்கும் ஒரு செயற்பாடாகும்.

மீண்டும் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் கைவைத்து, நாட்டையும் உங்களையும் ஆபத்தில் சிக்கவைக்கவேண்டாம் என நாம் ஜனாதிபதியிடத்தில் இவ்வேளையில் கூறிக்கொள்கிறோம் - என்றார்.

(ஒ-22)

13 ஐ நடைமுறைப்படுத்த ரணிலுக்கு முதுகெலும்பில்லை

தாக்குகிறார் ஹிருணிகா

கொழும்பு, பெப். 11

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தைரியம் இல்லை. நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் திசைதிருப்பு வதற்காகவே அவர் தற்போது இவ்விடயம் தொடர்பில் பேச ஆரம்பித்துள்ளதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தைரியம் கிடையாது.

13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டபோது நாட்டில் ஏற்பட்ட கலவரங்களின் போது அமைச்சராகக் காணப்பட்ட இவர் தற்போது இதனைப் பற்றிப் பேசுவது நகைப்புக்குரியது. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகளை திசை திருப்புவதற்காகவே அவர் தற்போது 13 குறித்து பேசிக் கொண்டிருக்கின்றார்.

13க்கு எதிராக வீதிக்கிறங்கி போராடியதைப் போன்று நாட்டின் ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வு கோரியும் போராடுமாறு தேரர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

13 என்பது ஒரு பிரிவினையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட பிரச்சினையாகும். எனவே அனைத்து மக்களினதும் பிரச்சினையாகக் காணப்படும் பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக போராடுவதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

13 ஆவது திருத்தம் புதிதாகக் கொண்டு வரப்பட்டதல்ல. அது ஏற்கனவே நடைமுறையிலுள்ள திருத்தமாகும். முதலில் இதிலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பின்னர் 13 பிளஸ் பற்றிக் கவனம் செலுத்தலாம் - என்றார். (ஒ-இ)

பெண்தலைமைக் குடும்பங்களுக்கு இந்தியத் தூதரகத்தால் உலருணவு

யாழ்ப்பாணம், பெப்.11

இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் பொருளாதாரம் நலிவுற்ற 250 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்.பொதுநூலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். இந்திய உதவித் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர் தலைமையில் உலருணவுப் பொதிகள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியத் தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் எல்.முருகன், இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் கு.அண்ணாமலை ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளைக் கையளித்தனர்.

அத்துடன் இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியும் இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவருமான மறைந்த அப்துல் கலாம் திருவுருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இந்தியத் தூதரக உயர்அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர்.

(ச-27)

ஒற்றையாட்சிக் கதையால் ஒருபோதும் மீண்டெழ முடியாது

நாடாளுமன்றில் உரைத்தார் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, பெப். 11

தமிழர்களுக்கு ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்று மீண்டும் மீண்டும் கூறினால் இலங்கையால் ஒருகாலமும் மீண்டெழ முடியாது. உலகிலுள்ள ஏனைய நாடுகளைப் போல சமஷ்டி அடிப்படையில் ஒரு தீர்வை முன்வைப்பதன் மூலமே நாட்டில் அமைதியைக் கொண்டுவர முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்களவர்களும், தமிழர்களும் இலங்கையின் இரண்டு தேசிய இனங்களாக இணைந்து வாழக்கூடிய ஓர் அரசியல் உரிமையையே கோருகிறோம். அது அதியுச்ச அதிகாரப்பகிர்வாகவும், சமஷ்டி அடிப்படையில் மீளப்பறிக்கப்படமுடியாததுமாக இருக்கவேண்டுமென்று கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு கோருகிறோம். ஒற்றையாட்சி என்ற கோஷம் எழுப்பும் சிங்களத் தலைவர்களுக்கு இந்த நாடு இருண்ட யுகத்தை நோக்கி பயணிப்பது தெரியவில்லை.

13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு 35 ஆண்டுகளாகிறது. இன்று அது உருத்தெரியாமல் போயுள்ளது.

13 ஆவது திருத்தத்துக்கு எதிராக இன்று பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். ஜனாதிபதியின் ஆதரவு இல்லாமல் அது சாத்தியப்படாது. தீர்வை வழங்கப்போவதாக சர்வதேசத்துக்கு ஒரு முகத்தைக் காட்டும் ஜனாதிபதி ரணில், மறுபுறம் பௌத்த பிக்குகளையும் இனவாதிகளையும் தூண்டிவிடுகிறார். சமஷ்டிக் கொள்கைகளை முன்வைத்த பண்டார நாயக்க, அன்று பௌத்த பிக்குவால் கொலை செய்யப்பட்டார். அதன் பின்னர் வந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் கொள்கைகள் நாட்டை போருக்குள் இட்டுச்சென்றது. இந்தப் போரே இன்று இலங்கையை பொருளாதார நெருக்கடி என்ற படுகுழியில் தள்ளியுள்ளது - என்றார்.

(ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்குகள் எரிப்பது எதிர்காலத்தையே!

ஜனா எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 11

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை பௌத்த பிக்குகள் எரிக்கிறார்கள். அவர்கள் எரிப்பது 13 ஆவது திருத்த நகல்களை அல்ல, இந்த நாட்டின் எதிர்காலத்தை என்பதை அரச தலைவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையில் அதிகாரங்களைப் பகிர்ந்து புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற வகையில் அவர் கருத்து வெளியிட்டிருந்தாலும் பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத அதிகாரப் பகிர்வு குறிப்பிடப்பட்டுள்ளது. ஒற்றையாட்சிக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு சாத்தியமற்றது.

75 ஆவது சுதந்திரதினம் கடந்த வாரம் கொண்டாடப்பட்டது. ஆனால் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை. சுதந்திரமடைந்த நாள் முதல் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டே வருகின்றனர். அவர்கள் 30 வருடங்களாக ஆயுத ரீதியில் போராட்டத்தையும் நடத்தினர். வடக்கு - கிழக்கில் இருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்தனர். இந்நிலையில் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இது அரசமைப்பில் உள்ள ஓர் அங்கமாகும். இதனை நிறைவேற்றாது இருப்பதானது அரசாங்கமே அரசமைப்பை மீறுகின்றது என்பதனையே காட்டுகின்றது.

இதேவேளை பௌத்த நாடு என்பதனால் பௌத்த பிக்குகளை எதிர்த்து எதனையும் நிறைவேற்ற முடியாது என்று மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். 2015 ஆம் ஆண்டில் அவரை சிறுபான்மை மக்களே ஜனாதிபதியாக்கினர். அந்த மக்களின் கருத்தைக்கூட கவனத்திலெடுக்காது மைத்திரிபால சிறிசேன கூறியமை தொடர்பில் கவலையடைகின்றேன்.

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு அல்ல. இதுவொரு ஆரம்பப் புள்ளி மாத்திரமே. எங்களுக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியே தேவையாகும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை பௌத்த பிக்குகள் எரிக்கின்றனர். அவர்கள் எரிப்பது இந்த நாட்டையே என்பதனை புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஒ-22)

சீனாவுக்கு இடமளிக்கலாம் என்றால் தமிழர்களுக்கு ஏன் மறுக்கின்றீர்கள்?

சரித ஹேரத் எம்.பி. கேள்வி

கொழும்பு, பெப். 11

கொழும்பு துறைமுக நகரத்தை ஒப்பந்தத்தின் ஊடாக சீனாவுக்கு வழங்கும்போது 13ஆவது திருத்தத்தை ஏன் நடைமுறைப்படுத்தக்கூடாது? என நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 13 ஆவது திருத்தம் தொடர்பான கருத்துக்களை ஜனாதிபதி சமூகமயப்படுத்தியுள்ளார். இனப்பிரச்சினைக்கும், இனங்களுக்கிடையில் உள்ள கருத்து வேறுப்பாடுகளுக்கு தீர்வு காணாமல் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது.

பல்லினக் கலாசாரத்தை ஒருமுகப்படுத்தியதால் இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளது. ஆகவே 13 ஆவது திருத்தத்தையும் ஒருமுகப்படுத்தும் வகையில் செயற்படுத்த வேண்டும். தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமாயின் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். அதற்கு 13 ஆவது திருத்தமே அடித்தளம். ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையில்லாத பிரச்சினையை தோற்றுவித்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில சிறந்த விடயங்களை முறையாக செயற்படுத்த வேண்டும். அதனை விடுத்து 13 ஆவது திருத்தம் தொடர்பில் சமூகத்தின் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கக்கூடாது. ஒப்பந்தம் ஊடாக கொழும்பு துறைமுக நகரம் வழங்கப்பட்டுள்ளமைக்கு எவரும் அச்சமடையாதபோது 13 ஆவது திருத்தத்தின் சிறந்த விடயங்களை ஏன் முழுமையாக நடைமுறைப்படுத்தக் கூடாது? இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாடு என்ற ரீதியில் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது - என்றார். (ஒ-இ)

வெற்றிலைக் கடை உடைத்துத் திருட்டு

தருமபுரம், பெப்.11

தருமபுரம் பொதுச்சந்தையிலுள்ள வெற்றிலை விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

கடையைப் பூட்டி விட்டுச் சென்று மறுநாள் வழமைபோன்று கடையைத் திறப்பதற்கு வந்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான வானொலிப் பெட்டி, இரண்டு லட்சத்துக்கு அதிகமான புகையிலை மற்றும் வெற்றிலை, பீடி உள்ளிட்ட பொருள்கள் களவாடப்பட்டமை அவதானிக்கப்பட்டது என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-113)

காணி, பொலிஸ் அதிகாரங்களை கனவிலும்கூட வழங்கவிடமாட்டோம்

உறுமுகிறார் அதுரலியே ரத்ன தேரர்

ஜனாதிபதி வேட்பாளராகி வெற்றி பெறுவதை இலக்காகக்கொண்டே வடக்கு, கிழக்கில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி கருத்துக்களை கூறுகின்றார். ஆனால் எந்த வகையிலும் அவ்வாறான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதற்கு இடமளிக்கமாட்டோம் என சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினரான அதுரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அரச கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க தந்திரங்களைச் செய்கின்றார். பொதுஜன பெரமுனவில் சிலரையும் சஜித் தரப்பில் இருந்து சிலரையும் இணைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல திட்டமிடுகின்றார். அதற்காக தனது கட்சியைப் பலப்படுத்தி தேர்தலில் வெற்றிபெற முடியுமென்று எதிர்பார்க்கின்றார்.

இதற்காகவே வடக்கு, கிழக்கில் காணி அதிகாரங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கதைக்கின்றார். மாகாணசபைகள் கலைக்கப்பட்டுள்ள நேரத்தில் அவர் எப்படி இதனைக் கதைக்க முடியும்?அப்படியென்றால் அந்த அதிகாரங்களை ஆளுநர்களிடம் தான் வழங்க வேண்டும் - என்றார். (ஒ-22)

சரத் வீரசேகர அடிமுட்டாள்

சீறினார் கஜேந்திரன்

கொழும்பு, பெப். 11

சரத் வீரசேகர போன்ற அடிமுட்டாள்களின் அறிவுரைகளை கேட்டதாலேயே கோத்தாபய ராஜபக்ச சொந்த இன மக்களாலேயே அடித்து விரட்டப்பட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரண்டு நாள்கள் விவாதம் நடைபெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் கஜேந்திரன் உரையாற்றும்போது சரத் வீரசேகர குறுக்கிட்டு கருத்துத் தெரிவித்த நிலையில் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது. இந்த வாக்குவாதத்தின்போது கஜேந்திரன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

சரத் வீரசேகர போன்ற பச்சை இனவாதிகளைத் துரத்திவிட்டு முற்போக்காகச் சிந்திக்கக் கூடியவர்களைத் தெரிவு செய்யுமாறு அவர் தெரிவித்தார்.

சரத் வீரசேகரவின் ஆலோசனையை கேட்டபடியாலே மஹிந்த மற்றும் கோத்தா ஆகியோர் இன்று தெருவுக்கு வந்துள்ளதைப் போன்று ஏனையவர்களும் தெருவுக்கு வரவேண்டிய நிலை ஏற்படும் என்றும் கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள நாட்டார் கதைகளில் வருகின்ற மாதன முத்தாவைப் போன்று சரத் வீரசேகர அடிமுட்டாள் என்றும் கஜேந்திரன் காட்டமாக பதில் வழங்கியிருந்தார். (ஒ-இ)

மக்கள் நலனில் குளிர்காயும் சுயநலவாதிகளுக்குச் சங்கு!

மன்னாரில் சுயேச்சை களத்தில்

மன்னார், பெப்.11

மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்க் கட்சிகள் பலவும் மக்கள் நலன் நோக்காது சுயநலபோக்கில் தங்கள் கட்சிகள் வளர்ந்தால் போதுமென செயற்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் இந்தத் தேர்தலில் சங்கு ஊதப்படும்.- இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் சுயேச்சையாக களமிறங்கியுள்ள கட்சி தெரிவித்துள்ளது. அதன் வேட்பாளர் அறிமுக நிகழ்வு பேசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலமாக நாம் அரசியலை மாற்றுபவர்கள் அல்லர். ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள், மக்கள் நலன் நோக்காது தங்கள் சுயநல போக்கில் செயற்படுவோருக்கு தக்க பாடம் கற்பிக்கப்படும். இவற்றுக்கெல்லாம் சங்கு ஊதி மக்கள் நலன்கருதாது செயற்படுவோரை மக்களுக்கு இனம் காட்டுவோம்.

நாம் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஒன்றுபட்ட சமூகமாக - சுயேச்சையாக சங்குச் சின்னத்தில் போட்டியிடுகின்றோம் - என்றனர். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றைக் கடப்பதற்கு பாலமில்லை போக்குவரத்து செய்வதில் ஆபத்து

முள்ளிமோட்டை கிராம மக்கள் விசனம்

மன்னார், பெப். 11

மன்னார், நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்துக்கு பயணிப்பதற்கான பாலம் அமைத்து தரப்படாமையால் ஆற்றில் இறங்கி ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்தில் 2018ஆம் ஆண்டு மக்கள் குடியேற்றப்பட்டனர். 90 குடும்பங்கள் வரை வசிக்கும் இந்தப் பகுதியில் 18 குடும்பங்கள் வரை ஆற்றைக் கடந்து குடியேற்றப்பட்டுள்ளனர். வீடுகளுக்கு அருகாமையாக அருவியாற்றின் கிளை ஆறு ஓடிக்கொண்டிருப்பதால் ஆற்றில் இறங்கியே குடியிருப்புகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மக்கள் குடியேற்றப்பட்டு 5 வருடங்கள் கடந்தபோதும் தற்காலிகமாகவேனும் பாலம் அமைத்துத் தரப்படவில்லை.

கோடைகாலத்தில் நீர் வற்றிக் காணப்படினும் மழைகாலங்களில் ஆற்றில் நீர் நிறைந்து காணப்படுவதால் அன்றாட கடமைகளில் ஈடுபடமுடியாது திண்டாட வேண்டியுள்ளது. அத்துடன் இங்குள்ள உள்ளக வீதிகளும் சீரமைத்துத் தரப்படவில்லை.

இதுதொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் உரிய அதிகாரிகள் இன்றுவரை பாராமுகமாகவே உள்ளனர்.

எனவே வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்று தற்காலிகமாகவேனும் பாலம் அமைத்து எமது போக்குவரத்தை சீர்செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-213)

ஒற்றையாட்சியை ஏற்கவே முடியாது!

சொல்கிறார் சுமந்திரன்

கொழும்பு, பெப். 11

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வையே கோருகிறோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ஜனாதிபதியின் அக்கிராசன உரையைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தம் அரசமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளது. அரசமைப்பை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு. அதனை நடைமுறைப்படுத்தாது செயற்பட்டால் ஜனாதிபதி அரசமைப்பை மீறினார் எனக் கருதப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கிராசன உரையில் பல விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் தீர்வு விவகாரத்தில் ஏகிய ராஜ்ய என்ற சொற்பதத்தை பாவித்துள்ளார். அது ஒற்றையாட்சி முறைமையை குறிக்குமாயின் அதனை முழுமையாக புறக்கணிப்போம். அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு ஒற்றையாட்சி முறைமைக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு சாத்தியமற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஓரிரு மாதங்களில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேச்சுக்களை முன்னெடுத்தார். இருப்பினும் கொள்கை உரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. ஒரு நாடு என்ற சொற்பதத்துக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளோம்- என்றார். (ஒ-இ)

சபாநாயகரை சந்தித்தார் முன்!

கொழும்பு, பெப்.11

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகமும், உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தலைவருமான பான் கீ -மூன், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேயவர்த்தனவை கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நாடாளுமன்றத்துக்கு வந்த பான் கீ-மூனை, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க ஆகியோர் வரவேற்றனர்.

இந்தச் சந்திப்பில் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் என்ற ரீதியில் பான் கீ -மூன், பசுமை அபிவிருத்தி, நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தியதுடன், கார்பன் வெளியீட்டைக் குறைத்து நிலைபேறான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் புதிய கூட்டாண்மைகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார். அரசியலில் கொள்கைகள் வகுக்கப்படும்போது பசுமை வளர்ச்சிக்கான மாதிரியொன்று அடையாளம் காணப்பட வேண்டும் என்றும், அதற்குத் தேவையான குரல் நாடாளுமன்றத்தின் ஊடாக எழுப்பப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (எ-இ)

இன்றைய நாள் (ராசிபலன்)

மேடம்: வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு.

இடபம்: உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலமுக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

மிதுனம்: எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள்.

கடகம்: எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

சிம்மம்: காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

கன்னி: சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிரச்சினைகளை சமாளித்து விடுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

துலாம்: உபுதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பேசும்போது பொறுமை அவசியம். தாமதம் ஏற்படக்கூடும்.

விருச்சிகம்: நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. உங்கள் எண்ணத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். சங்கடங்கள் ஏற்படலாம்.

தனுசு: உற்சாகமான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

மகரம்: கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.

கும்பம்: புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் அவசியத் தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

மீனம்: எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்வாதம் ஏற்படக்கூடும்.

சதுப்பு நிலமாகக் காட்சியளிக்கும் இலுப்பையடி ஆலயச் சுற்றுவீதி

புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.11

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சுற்றுவீதி புனரமைப்பின்றிய நிலையில் மழைகாலங்களில் சதுப்பு நிலமாக மாறுகின்றது. இந்த வீதியைப் புனரமைத்துத் தர உரிய தரப்பினர் வழிவகை செய்யவேண்டும் என ஆலய நிர்வாகத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழைகாலங்களில் இந்த வீதியில் வெள்ளம் தேங்குவதால் சதுப்பு நிலமாக மாறுகின்றது. இதனால் இந்த வீதியால் பயணம் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் சுவாமி வீதிவலம் வர முடியாத நிலையும் காணப்படுகிறது. குறித்த வீதியை தார் வீதியாகப் புனரமைத்துத் தருமாறு ஆலய நிர்வாகத்தினரால் வலி. கிழக்குப் பிரதேசசபை மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பலரிடம் கோரிக்கை விடுத்த போதும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எதிர் வரும் ஜூலை மாதம் ஆலயத்தின் மகோற்சவம் ஆரம்பமாகவுள்ளது. ஆகவே அதற்கு முன்பதாக குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆலயப் பரிபாலன சபையினர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நம்பி நின்றால் நடுத்தெருதான்

இந்துசமுத்திரத்தில் தன்னைப் பிராந்திய வல்லரசாக நிலை நிறுத்திக்கொள்வதற்கு இந்தியா படாதபாடு பட்டுக்கொண்டி ருக்கின்றது. அத்தகைய வல்லரசுக்குகூட போக்குக்காட் டும் நிலையில்தான் இலங்கை இருக்கின்றது. அதனால் சிங்கள ஆட்சியாளர்களை – இலங்கை அரசாங்கத்தை நம்பி நம்பி ஏமாறுவதுதான் இந்தியாவின் இராஜதந்திர மாக (?) தொடர்கின்றது. இந்தியாவின் தென்முனையின் பாதுகாப்பு இலங்கையின் வடபகுதித் தமிழர்களிடம்தான் இருக்கின்றது. இது இந்தியாவுக்கும் புரியாத ஒன்றல்ல. இலங்கை அரசாங்கங்களைச் சமாளிப்பதன் ஊடாக, அவர் களைக் குளிரவைப்பதன் ஊடாக தனது காரியங்களைச் செய்து முடிக்கலாம் என்று நினைக்கின்றது பாரததேசம். அதற்காக அதிகளவு விலையையும் அது கொடுத்துள்ளது. ஆனால், கடைசியில் பாரததேசத்தையே ஏமாற்றி கவிழ்க் கும் கைங்கரியத்தைத்தான் இலங்கை அரசாங்கங்கள் செய்துவந்துள்ளன.

பொருளாதார நெருக்கடியில் சிக்கிச் சேடம் இழுக்கும் நிலையிலிருந்த இலங்கைக்கு ஆபத்பாந்தவனாக கைகொ டுத்தது இந்தியா மாத்திரமே. அவர்கள் மாத்திரம் உரிய நேரத்தில் உதவிகளைச் செய்திருக்காவிட்டால் இன்று இலங்கை என்கின்ற தேசம் இருந்திருக்குமோ தெரியாது. இரு கைகளையும் அகட்டி நீட்டி இந்தியாவிடம் எல்லா வற்றையும் இரந்து பெற்றது இலங்கை. இந்தியாவும் தனது ஆதிக்கத்தை இலங்கையில் நிலைநாட்டலாம் என்ற எண் ணத்தில் இலங்கை அரசாங்கத்தை நம்பி உதவிகளைச் செய்தது. அதிலும் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இந்தி யாவின் ஒப்புதலும் தேவை என்ற நிலையில், இலங்கை வாலைச்சுருட்டி பவ்வியமாக நின்றது. அந்தக் காலப் பகுதியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு வந்து, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழு மையாக நடைமுறையாக்குவது தொடர்பிலும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகவும் அழுத்தம் கொடுத்திருந் தார். ஜனாதிபதி ரணிலையும், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியையும் வைத்துக்கொண்டு பகிரங்கமாக ஊடக சந்திப்பிலும் அதனைத் தெரிவித்திருந்தார். மறுகணமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் கூட வழங்கப்படும் எனவும் தமிழ்த் தலைவர்களை அழைத்து தெரிவித்திருந்தார். வெகு விரைவில் அவற்றைச் செய்வேன் என்றும் உறுதியளித்தார். அவரது இத்தகைய அறிவிப்பு தென்னிலங்கையில் எப்ப டிப்பட்ட எதிர்வினையை ஏற்படுத்தும் என்பதும் ரணிலுக் குத் தெரியும். அவர் எதிர்பார்த்தமைபோன்று மகாசங்கத் தினர், பிக்குகள், சிங்கள இனவாதிகள் எல்லோரும் ரணில் ஏதோ தனிநாடு கொடுக்கப்போகின்றார் என்ற ரீதியில் கூச்சலிடத்தொடங்கினார்கள். அவரது கூச்சல்களை யடுத்து அந்தத் தருணத்தை எதிர்பார்த்திருந்த ஜனாதிபதி ரணிலும், தனது நிலைப்பாடுகளிலிருந்து மெல்ல மெல்ல பின்வாங்கத் தொடங்கியிருக்கின்றார்.

இவற்றுக்குமேலாக, யாழ்ப்பாண மக்களுக்காக இந்திய மக்களின் நிதியில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மையம் கூட கொழும்பு அரசால் நிர்வகிக்கப்படும் நிலை மையே உருவாகியுள்ளது. யாழ். மாநகரசபையின் நிலத் தில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்திறப்புவிழாவில் மாநகரசபை திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. வேண்டுமென்றே அவமானப்படுத்தப்பட்டிருக்கின்றது. மாகாணசபை முறைமைதான் தீர்வு என்று சொல்லிக் கொண்டு மத்திய அரசாங்கத்தில் எப்போதும் அமைச்சராக ஒட்டிக்கொண்டிருக்கும் ஒருவர்கூட, அரசியல் காழ்ப்புணர் வில் மாநகரசபையின் அதிகாரத்தை பறிப்பதற்குத் துணை போய்க்கொண்டிருக்கின்றார். இப்போது இந்தக் கட்டட மும் இந்தியா எதிர்பார்த்தமைக்கு மாறாக – அது அமைக் கப்பட்ட நோக்கத்துக்கு மாறாக – இந்தியாவின் விருப்பம் துளியும் இன்றி கொழும்பு அரசின் தலையீட்டுடன் இன்று கையளிக்கப்படவுள்ளது.

ஆக மொத்தத்தில் இந்தியாவிடமிருந்து எல்லாவற்றையும் உருவியெடுத்துவிட்டு அவர்களுக்கு 'பெப்பே....' காட்டி யிருக்கின்றது இலங்கை அரசாங்கம். கடந்த கால கசப்புக் களை மறந்து ஈழத் தமிழர்களை இந்தியா நம்பவேண்டும். அதற்கேற்ற வகையில் இந்தியாவின் கொள்கைவகுப்புக் கள் மாறவேண்டும் என்று பலமுறை சொன்னாலும் அதை புதுடில்லி காதில் வாங்கிக்கொள்வதாக இல்லை. மீண்டும் மீண்டும் இலங்கை அரசாங்கத்தை நம்பி நம்பி நடுத்தெரு வில்தான் வந்து நிற்கப்போகின்றது இந்தியா.

நாளொரு நல்வார்த்தை

"தான் கூவுவதைக் கேட்பதற்காகவே சூரியன் உதிக்கிறான் என்று சேவல் நினைக்குமானால் அதுதான் அகந்தை"

– ஜோர்ஜ் எலியட்

'13' தொடர்பில்

ஐ.ம.ச., ஜே.வி.பி. நிலைப்பாடுகள் மூடுமந்திரமாகவே உள்ளன

பகிரங்கப்படுத்துமாறு அமைச்சர் நிமால் கோரிக்கை

கொழும்பு, பெப். 11

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடை முறைப்படுத்துவது தொடர்பில் தமது கட்சிகளின் நிலைப்பாடுகளை ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பி.யும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என அரசு வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளு மன்றத்தில் நேற்று 2ஆவது நாளாகவும் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மூத்த அமைச்ச ரான நிமால் சிறிபாலடி சில்வா, அரசின் சார்பில் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததா வது:-

13 ஆவது திருத்தச்சட்டம். அரசமைப்பின் ஓர் அங்கம். 13 முழுமையாக நடைமுறைப் படுத்தப்படும் எனப் பலரும் கூறியுள்ளனர். 13 பிளஸ் உறுதிமொழிகூட வழங்கப்பட்டுள் ளது. எனவே, ஜனாதிபதியின் அறிவிப்பு புதிய விடயம் அல்ல.

13 தொடர்பில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு என்ன. ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்னவென்று கேட்க விரும்புகின்றோம். இது விடயத்தில் ஒளித்து விளையாடாமல் வெளிப்படையாக முடிவை அறிவிக்க வேண் டும். ஆனால் விவாதத்தில் பங்கேற்காமல் அவர்கள் இது விடயத்தில் இரட்டை அரசியல் நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

நாட்டுக்காகவே ஜனாதிபதி முடிவுகளை எடுத்து வருகின்றார். அதனால்தான் அவரை ஆத ரிக்கின்றோம். இதனால் எமது அரசியல் இருப்புக்கும் சிக்கல் வரலாம் - என்றார்.

(ஒ-44)

கியூ.ஆர். குறியீட்டுடன் வேட்பாளர்கள் பட்டியல்

வெளியிட்டது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியலை தேர்தல் கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்பிரகாரம் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் போட்டியிடும் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசி யல் கட்சிகளின் வேட்பாளர்கள் பெயர்ப்பட் டியலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளி யிட்டுள்ளது.

இந்தப் பெயர்ப்பட்டியல் தேர்தல்கள் ஆணை யத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது. வேட்பாளர்கள் பட்டியல் குறித்த விவரங்களுக்கு கியூ.ஆர். குறியீடும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறியீட்டை ஸ்கான் செய்வதன் மூலம் தொடர்புடைய தகவல்களைப் பெற முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

(ச-இ)

நாளை 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை தை 29

சுபநேரம் : 09.34 - 11.04
ராகுகாலம் : 05.04 - 06.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்ற விவாதத்தை புறக்கணித்தது ஐ.ம.சக்தி!

கொழும்பு, பெப். 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்கஉரை மீதான விவாதத்தையும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்துள்ளது.

9ஆவது நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. அரசின் கொள்கைத் திட்டத்தை முன்வைத்து ஜனாதிபதி உரையாற்றினார். ஜனாதிபதியின் அக்கிராசன உரையையும் சஜித் அணி புறக்கணித்திருந்தது. சபைக்கு வரவில்லை. இந்நிலையில் கொள்கை விளக்க உரைமீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதம் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நேற்றுமுன்தின சபை அமர்விலும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்கவில்லை. ஜனாதிபதியின் உரையை எதிர்த்து சபையில் இருந்து வெளிநடப்புச் செய்த சுதந்திர மக்கள் கூட்டணி விவாதத்தில் பங்கேற்றிருந்தது. (ம-44)

மரண அறிவித்தல்

திரு.வேலுப்பிள்ளை இரவீந்திரன்



மட்டக்களப்பு, துறைநீலாவணையினைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை இரவீந்திரன் கடந்த (05.02.2023) அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப்பிள்ளை மாரிமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பூபாலசிங்கம் கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், இராகுலன், கார்த்திகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாரங்காவின் அன்பு மாமனாரும், கியாராவின் பேரனும், மோட்சநாதன், காலஞ்சென்ற தர்மலிங்கம், திலகராணி, மதிவண்ணன், தேவகி, பத்மநாதன், ஞானசோதி, காலஞ்சென்ற ஜோதிமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கெங்காதேவி, தர்மபாலன், கிருஷ்ணபாலன், ஞானதேவி, இரகுபாலன், தர்மதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன், இராஜேஸ்வரி, இரஞ்சினிகுமாரி, வெற்றிவேலாயுதபிள்ளை, பாலஸ்ரீ, மனோகரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham (ONT), L3R5G1 இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, நாளை (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, Highland Hills Crema Torium இல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
001 416 284 6254
077 977 3405
076 222 7334

தகவல்:
திரு.பூ.மனோகரன்
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(CS 23096)1-6

மரண அறிவித்தல்



தோற்றம்
02.04.1945

மறைவு
09.02.2023

சின்னத்துரை ரட்ணராஜா

மாத்தளை உக்குவெலவை பிறப்பிடமாகவும், 588/8, நாவலர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ரட்ணராஜா அவர்கள் கடந்த (09.02.2023) வியாழக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பார்வதிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம் பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், டினேஸ்க் (ஜனசக்தி இன்சூரன்ஸ் - யாழ்ப்பாணம்), டினேந்திரன் (பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கயாழினி (ஆசிரியர்- யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி), சாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்மதுரை (கனடா), காலஞ்சென்றவர்களான யோகராஜா, சேதுராஜா, சிவராஜா, தர்மராஜா, சந்திரோதயம், சிவபாக்கியம், முகுந்தராஜா மற்றும் குகராஜா (திருகோணமலை), இந்திராணி (மட்டக்களப்பு), சரஸ்வதி (கனடா), சண்முகராஜா (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சதானந்தன், நித்தியானந்தன், மனோகரன், ரஞ்சிதராஜா, லோகேஸ்வரன் மற்றும் இந்துமதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், லருண், நெளனீகன், யோய்சாய், ரகுராம், காருண்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.588/8, நாவலர் வீதி, அரியாலை.
0777 399 678, 077 279 6694

தகவல்:
குடும்பத்தினர்

(CS 23025) 1-6

முதல்வர் ஆர்னோல்ட் திடீர் கண்காணிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆர்னோல்ட் தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் திடீர் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நகர்ப் புறத்தில் அமைந்துள்ள மாநகர சிற்றங்காடி, பேருந்து நிலைய கடைத்தொகுதிகள், நவீன சந்தைக் கட்டடத்தொகுதியில் உள்ள கடைகள் உள்ளிட்ட பகுதிகளில் அவர்களை ஆய்வை மேற்கொண்டார்.

அங்காடிகளில் உள்ள சுகாதார நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. வியாபார நிலையங்களை நடத்துபவர்கள் நடைபாதைக்கு இடையூறின்றி வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் முதல்வர் ஆர்னோல்ட் உத்தரவிட்டார். முதல்வரின் இந்தக் களப்பயணத்தில் மாநகர பொறியியலாளர், சுகாதார மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம)

நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எம்மிடம் அரசாங்க உத்தியோக மணமகன்கள், மணமகள்கள், இஞ்சினியர், டொக்டர், எக்கவுண்டன், அரச சார்பற்ற உத்தியோக வரன்கள், வெளிநாட்டு மணமகன்கள், மணமகள்கள் உள்ளனர். உங்களுக்கு ஏற்ற வரன்களை குறுகிய காலப் பகுதியில் உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: வி.ஜெயந்தி- T.P: 077 9733 183

காணவில்லை

தியாகராசா நிலவன், வயது 24 என்பவரைக் கடந்த 22 நாள்களாகக் காணவில்லை.

இவரைப் பற்றிய விபரம் அறிந்தவர்கள் அல்லது கண்டவர்கள் கீழுள்ள தொலைபேசி எண்ணுக்கு அறியத்தரவும்.

077 913 9853,
077 289 2583

(223594) 6

முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
21.11.1945

மறைவு
25.01.2022

கடந்த (25.01.2022) அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் இளையப்பு மயில்வாகனம்

(இலங்கை மின்சாரசபை ஓய்வுநிலை ஊழியர்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவலைகள் நாளை (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறும் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம்.

குடும்பத்தினர்
076 163 7830
076 870 7263

(cs.23436) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 05 . 1942

மறைவு
08 . 02 . 2023

அப்பாக்குட்டி இளையதம்பி

(உத்தரவுபெற்ற நில அளவையாளர்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி இளையதம்பி கடந்த (08.02.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி பொன்னி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா சீதாலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், சுசிலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதி, சின்னாச்சி, நாகமுத்து, முருகேசு, கந்தையா, தங்கமுத்து மற்றும் செல்லத்துரை, தெய்வானை, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜேந்திரராவ், வத்சலா (ஜேர்மனி), கௌசலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சூரியா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் வ.மா), முகுந்தன் (லண்டன்), விஜிதன் (முன்னாள் விரிவுரையாளர், தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை), இந்துஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிதரன் (ஆசிரியர் - கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), யசோதரை (லண்டன்), ஜீவகலா (U.S.A), மோகனதாஸ் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இளவேனி, வர்கேஸ், நிகேஸ், தேயஸ்வி, யஸ்வின், அஸ்வின் ஆகியோரின் அன்புக்குரிய பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல: 29/13, உடையார் ஒழுங்கை, கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல. 076 923 2266
077 222 3711
077 471 3637

தகவல்:
குடும்பத்தினர்

9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
24 . 03 . 1960

உதிர்வு
22 . 01 . 2014

அமரர் சரஸ்வதி சிதம்பரநாதன்

(பேபி அன்ரி)

(முன்னாள் பொதுமுகாமைத்துவ உதவியாளர் தேர்தல்கள் திணைக்களம் – கச்சேரி, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க சஷ்டி [11.02.2023-சனிக்கிழமை]

அன்புடன் அரவணைத்து வையத்துள் வாழ்வாங்கு வாழ
பாரினிலே பண்புடன் வாழ்ந்து ஒளிமயமான எதிர்காலத்தை
எமக்கு காட்டி ஆண்டு ஒன்பது சென்றாலும்
எம் இதயங்களில் சுடர்விட்டு ஒளிரும் பேபியே
அணைந்தும் அணையாத தீபமாய் நீங்காத நினைவுடன் இருப்பீர்கள்
நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே
அன்பானவளே உம் பெயர் விளங்கும்
கண்முன் வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் பேபி அன்ரியே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 01 - 1928

மறைவு
25 - 01 - 2023

திருமதி திருஞானபாக்கியம் கணபதிப்பிள்ளை

உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் "திருப்பதி" கோப்பாய் வீதி உரும்பிராய், New Hampshire, USA மற்றும் Toronto, Canada வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. திருஞானபாக்கியம் கணபதிப்பிள்ளை அவர்கள் கடந்த (25.01.2023) புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், உரும்பிராயைச் சேர்ந்த காலம்சென்றவர்களான மயிலைப்பிட்டி ஆறுமுகம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், நாரந்தனையைச் சேர்ந்த காலம்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மருமகளும், காலம்சென்ற கணபதிப்பிள்ளை (British Army / Ceylon Police) அவர்களின் ஆருயிர் மனைவியும், மனோகரன் (Canada), கௌரி (USA), ஸ்ரீதரன் (Canada), ஜெயகௌரி (வதனி UK), காமேசன் (USA) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜீவி, மகேந்திரரத்தினம், பிரணவாஸ்வரன், சுஜோ, காலம்சென்ற தர்மதா, ஜனனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம்சென்றவர்களான தங்கம்மா, இலட்சுமி, சபாரத்தினம், சிவபாக்கியம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலம்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, தில்லையம்பலம், செல்வத்துரை, தையல்முத்து, தில்லையம்மா, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காயத்திரி - பிரசாந்த், காத்யாயினி, நிரோஷா - சாம், மாலன் - அலசன், அனுஷன், ஜோயல், பிரியங்கா றதீஸ், சாயகி, வாஷினி, கஜானனன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், கிரன், ஜலா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 384 Finley Ave., Ajax, Ontario வில் அமைந்துள்ள Ajax Crematorium & Visitation Centrey; 11-02-2023, சனிக்கிழமை மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையும், மறுநாள் 12-02-2023, ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரையும் பார்வைக்காக வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மதியம் 12 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 05 . 1924

மறைவு
09 . 02 . 2015

அமரர் திருமதி தங்கரத்தினம் கந்தையா

திதி:- தேய்பிறை ஷஷ்டி

அம்மா நீங்கள் மறைந்து எட்டாண்டுகளாகிவிட்டது. ஆனால் அதை இன்றும் எங்களால் நம்ப முடியவில்லை. எட்டாண்டுகள் அல்ல இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டு ஒரு போதும் அகலாது. இன்னும் உங்களின் அன்பும், பண்பும், பாசமும் நிறைந்த அன்பு முகம் பார்த்த இடமெல்லாம் படமாக எம் கண் முன் நிறைந்து நிற்கின்றது.

அம்மா நீங்கள் எல்லோரும் நலமாக வாழ பல நன்மைகள் செய்து, பெருமைகள் பல தேடித்தந்து, கண்ணியமாக வாழ்ந்து, இன்றும் மறைந்தும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு உத்தமி! அம்மா நீங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைத்து இன்னும் நாம் உங்களைப் பூசித்துக் கொண்டிருக்கின்றோம்.

அம்மா உங்களின் ஆத்மா சுட்டிவேரம் கண்ணகை அம்பாளுடன் இரண்டறக் கலந்து பேரின்பத்தை அடைய வேண்டும் என்று நாங்கள் அம்பாளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

உங்கள் பிரிவால் துயருறும்,
மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
4162 92 85 92

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
(CS/4904946)

கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின்
உறுப்பினர் **Dr.R. சிறீகஜன்** அவர்களின்
அன்புத் தந்தை
வேலுப்பிள்ளை இராமர்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்.
(CS 490504.6

பெயர்மாற்றம்

உரும்பிராய் தெற்கு, யோகபுரத்தில் வசிக்கும் **ஜெகதீபன் துஸ்யந்தி** ஆகிய நான் எனது பெயரை **ஜெகதீபன் துஸ்யந்தினி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஜெகதீபன் துஸ்யந்தினி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.
(CS/ 490504.6

ஜெகதீபன் துஸ்யந்தினி

வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள
வியாபார நிலையத்துக்கு
வேலைக்கு ஆள்கள் தேவை.
வேலை நேரம் :-
காலை 9.00 - 8.00
077 729 0300 (CR 49057) (3/6)

16 ஆம் ஆண்டு நீங்கா நினைவில்

செல்வன் பத்மகாந்தன் சஞ்ஸீத்

(மாணவன் - யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
S.S.M. பொறியியல் கல்லூரி சேலம் - இந்தியா)

மண்மகிழ 19.03.1985 — **கண்நெகிழ** 11.02.2007

சொல்லாமல் வந்த விதி சோகத்தை தந்ததனால்
அல்லலுற்று அழுகின்றோம் ஆற்றாது
- திகைக்கின்றோம்
வேர் அறுந்த விருட்சமாய் விழுதிழந்து
- வாடுகின்றோம்
வருடங்கள் பதினாறு விரைந்து மறைந்தாலும்
மறையாது எங்கள் அகமெங்கும் உன் நினைவுகள்
கரைந்து இதயம் கனத்தாலும்
- கடவுள் இறையடி தொழுகின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"புனித வாசம்"
மீசாலை கிழக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்
077 957 9793

வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை

கீரிமலை உற்சவ கால மற்றும் சிவராத்திரி தினத்திற்கான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் ஏலத்தில் வழங்கல்

கீரிமலை உற்சவ கால சிவராத்திரி தினத்திற்கான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் 2023.02.15 ஆம் திகதியன்று (புதன்கிழமை) பி.ப 02.00 மணிக்கு கீரிமலை பேரூந்து நிலையத்தில் நடைபெறவுள்ளது. எனவே பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 2023.02.15 ஆம் திகதி (புதன்கிழமை) பி.ப.01.00 மணிக்கு முன்பாக தெல்லிப்பளை உபஅலுவலகத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு – மேலதிக விபரங்களை 01.02.2023 ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகையில் பார்வையிடவும்.

மேலதிக தொடர்புகளுக்கு: **021 224 1130**

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.
(cr 39230) (2) 4 x 10

பெறுகை அறிவித்தல்

பலாலி விமான நிலையத்தில் கடமையாற்றும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஆண் அலுவலர்களின் விடுதி வசதிகளுக்காக கட்டிடமொன்றினை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்.

1. பலாலி விமான நிலையத்தில் கடமையாற்றும் இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் ஆண் அலுவலர்களின் விடுதி வசதிகளுக்காக, பின்வரும் வசதிகளைக் கொண்டுள்ள கட்டிமொன்றினை வாடகை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

	ஆண் அலுவலர் விடுதி
01	தரை ஓடு (Tile) பதிக்கப்பட்ட இணைப்பு கழிப்பறை வசதிகளுடன் குளியலறை வசதிகளைக் கொண்டுள்ளதும், விதானம் (Ceiling) மற்றும் தரை ஓடு பதிக்கப்பட்ட தரையுடன், ஆகக் குறைந்தது 04 அறைகளை அல்லது அதிகபட்சமாக 08 அறைகளுடன் தங்குமிட வசதிகளைக் கொண்டுள்ள விடுதிக் கட்டிடமொன்றாக இருத்தல்.
02	நீர் மற்றும் மின்சார வசதிகளைக் கொண்டிருத்தல்.
03	பலாலி விமான நிலையத்திலிருந்து, 20 கி.மீ க்கு உட்பட்டதாக அல்லது அதற்கு கிட்டியதாகவும் பிரதான பாதையினை முன்னோக்கியதாகவும் இருத்தல்.
04	ஆகக் குறைந்தது ஒரே நேரத்தில் 05 வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமாகும் வகையில் கொங்கிறீற்று இடப்பட்ட தரையினைக் கொண்டிருத்தல்.
05	அனைத்து அறைகள் மற்றும் மண்டபம் என்பன மின்விசிறி மற்றும் வாயு சீராக்கல் வசதிகளைக் கொண்டிருத்தல்.
06	அறைகளுக்கும் தேவையான தளபாடங்களும் வழங்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு அறைக்கும். 1. இரண்டு கட்டில்கள் 2. இரண்டு புடவை இறாக்கைகள் 3. மேசை மற்றும் கதிரை(ஒவ்வொன்றும்) 4. அலுமாரி ஒன்றினை வழங்குதல்
07	கட்டிடத்தினைச் சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டிருத்தல்.

2. மேற்கூறிய வசதிகளுடன் கூடிய கட்டிடமொன்றினை நீங்கள் வைத்திருப்பின், பின்வரும் தகவல்களுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையில் உங்களது விலை மனுக்களை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய தயாரித்து, பிரதி சுங்கப் பணிப்பாளர்(யாழ்ப்பாணம்), யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 2023.02.14 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கப் பெறச் செய்தல்வேண்டும் அல்லது அங்கு வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

i. கட்டிடத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான ஒப்பாவணத்தின் பிரதி
ii. கட்டத்தின் திட்ட வரைபடம்
iii. கட்டிடத்தில் காணப்படுகின்ற வசதிகள்
iv. மாத வாடகை (ரூ.)
v. தளபாடப் பட்டியல்
vi. ஏனையவை

3. முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "பலாலி விமான நிலைய ஆண் அலுவலர்களுக்காக விடுதி வசதிகளை வழங்கல்" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.
4. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதானது, 2023.02.17 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முடிவடைகிறது. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான காலம் முடிவடைந்ததும், அவை உடனடியாகத் திறக்கப்படும் என்பதோடு, இதன்போது கட்டட உரிமையாளர் அல்லது அவர் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் இதில் பங்கேற்கலாம்.
5. சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்களை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது தொடர்பிலான முழு அதிகாரத்தினையும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் பெற்றுள்ளார்.
6. மேலதிக விபரங்களை 0112221680 என்ற இலக்கத்தில் சுங்கப் பணிப்பாளரினை (சேவை வழங்கல்) அல்லது 0212220690 என்ற இலக்கத்தில் பிரதி சுங்கப் பணிப்பாளரினை (மீாழ்ப்பாணம்) தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்.
திணைக்களம் சார் சிறு பெறுகைக் குழு.
இலங்கை சுங்கத் திணைக்களம்.
சுங்கத் தலைமைக் கட்டிடம்.
இல. 40, பிரதான வீதி.
கொழும்பு 11.

Chundikuli Girl's College Jaffna

VACANCIES

Applications are invited from suitable candidates for the below posts.

1. TEACHER OF LOGIC & SCIENTIFIC METHODS
Requirement:
- Should possess a degree in the relevant field.

2. TEACHER OF HINDU CIVILIZATION
Requirement
- Should possess a degree in the relevant field.

3. SCHOOL LIBRARIAN
Requirement
- 3 Passes at the G.C.E (A/L)
- Preference will be given to those who have followed Diploma in Library Science.
- Age between 25 - 55 years.

Application close on 20.02.2023. only shortlisted candidates will be called for an interview.

Principal.
Email :- forwardcgc@yahoo.com
Address :- 6, Colombogam road, Jaffna.

பெயர்மாற்றம்

இல.362, கெழுதுகம, செவகைல, மொனராகலவில் வசிக்கும் **ஹர்ஷன்** ஆகிய நான் எனது பெயரை **H.A சதேவ்கிம்ஹான** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **H.A சதேவ் கிம்ஹான** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப் படுத்துகின்றேன்.
(CS/49055)4.6

H.A சதேவ் கிம்ஹான

22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

தோற்றம்	மறைவு
15	14
08	01
1932	2001

திதி: ஐரவக்க சஷ்டி

ஆண்டுகள் இருபத்தியிரண்டு ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்!
இன்று வேண்டித் துதித்தே இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

9/1, சுப்ரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(cs.23426) (2.6)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி மனோகரன்

பிறப்பு
31.08.1955

இறப்பு
04.02.2023

தெல்லிப்பளை நாமகள் வீதியை பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு, மானிப்பாய் ஈஞ்சடி வைரவர் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மனோகரன் கடந்த (04.02.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், உடுவில் தெற்கு, மானிப்பாய் ஈஞ்சடி வைரவர் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஷ்ப்பவதி (வசந்தி) அவர்களின் ஆருயிர் கணவரும், சியாமினி (கெமந்தி - சுவிஸ்), கஜந்தினி (கஜந்தி - டென்மார்க்), சுயந்தினி (சுயந்தி - சுவிஸ்) ஆகியோ ரின் உயிர்த் தந்தையும், யசோதரன் (யசோ - சுவிஸ்), சீவகன் (ஜீவன் - டென்மார்க்), நகுலானந் (நகுலன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும், அபினாஷ் (சுவிஸ்), அங்கதன் (சுவிஸ்), வசீகா (டென் மார்க்), யதிகா (டென்மார்க்), வின்சிகா (டென்மார்க்) நமிதா (சுவிஸ்), நவீன் (சுவிஸ்) ஆகியோரின் ஆசைப் பேரனும், சிவகுமார் (சிவா) அவர்களின் அன்புச் சகோதரரும், புனிதவதி, காலஞ்சென்ற குணசேகரம், ஞானசேகரம், சசி, புவனேஸ்வரி ஆகி யோரின் அன்பு மைத்துனரும், சத்தியசீலன் (லண்டன்), ஜெயசீலன் (சுவிஸ்), பிறேமசீலன் (லண்டன்), சர்மிலா (லண்டன்), சாந்தசீலன், சகிதா ஆகியோரின் ஆருயிர் சிறிய தந்தையும், காலஞ் சென்ற ஜெனோவா மற்றும் றஜிதா, செல்வி, அனோசா, சிவா, உமா ஆகியோரின் அன்பு மாமனா ரும், கஜித், சஜீனா, கேனுஜா ஆகியோ ரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய்
ஈஞ்சடி வைரவர் கோவிலடி.

தகவல்:
குடும்பத்தினர்
077 420 0398

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேசி 'கொஹொம்ப' குழந்தை பராமரிப்பு தயாரிப்புகள்:

அதிக மூலிகைகளின் நன்மைகளுடன் மீள் அறிமுகம்

இலங்கையின் முதற் தர மூலிகைக் குழந்தை பராமரிப்பு வர்த்தக நாமமான, சுதேஷி "Khomba Baby Soap" (கொஹொம்ப பேபி சோப்), புதிய மூலிகைப் பொருட்கள் மற்றும் புதிய இனிமையான வாசனைத் திரவியங்களுடன் மேலும் பல தயாரிப்பு வகைகளுடன் மீள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

தேங்காய்ப் பால், கற்றாழை, ஒலிவ் எண்ணெய், பாதாம் எண்ணெய், மரமஞ்சள், தேன், ஆனைக்கொய்யா, இக்சோரா மலர் ஆகியவற்றின் சேர்க்கையுடன் பிரதானமாக வேம்பு (கொஹொம்ப) சார்ந்த தயாரிப்புகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளன. அவை அந்தந்த சந்தைப் பிரிவுகளில் அதன் தனித்துவத்தை பேணி வருவதாக, கொஹொம்ப பேபி குழந்தைகளின் தனிப்பட்ட பராமரிப்பு உற்பத்தியாளரான Swadeshi Industrial Works PLC தெரிவிக் கின்றது.

பேபி சோப், பேபி கொலோன், பேபி கிரீம், பேபி பவுடர், பேபி ஷம்பு, பேபி ஒயில், கிட்ஸ் கொலோன், பேபி கிஃப்ட் பெக் ஆகியவற்றை உள்ளடக்கிய கொஹொம்ப குழந்தை பராமரிப்பு தயாரிப்புகள் (Khomba Baby Range), உள்நாட்டி லுள்ள மூலிகைப் பொருட்கள் அடங்கியுள்ளது. அத்துடன் அவ்வாறு அடங்கிய உள்நாட்டில் உள்ள ஒரேயொரு தயாரிப்பு சுதேஷி கொஹொம்ப பேபி ஆகும். சுதேஷியின் உற்பத்திகள் யாவும் வளர்ந்து வரும் சந்தைப் பிரிவில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. அவை தினந்தோறும் சிறந்த ஆரோக்கியம், சுகாதாரம், பாதுகாப்பு, சருமத்தில் மென்மையான தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இயற்கைக்கு உகந்த தயாரிப்பு களைத் தேடுபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சுதேசி ஆகிய நாம், 1941ஆம் ஆண்டு முதல் சரு மத்திற்கு உகந்த மென்மையான மூலிகை சவர்க்காரங்களை தயாரித்து வருகிறோம் என்பதுடன், எமது நுகர்வோருக்கு மேலும் மதிப்பை ஏற்படுத்தும் வகையில் தேங்காய்ப் பால், மரமஞ்சள், ஆனைக்கொய்யா, போன்ற இயற்கையின் சிறந்த மூலிகைப் பொருட்களுடன் கொஹொம்ப பேபி வர்த்தகநா மத்தை மீள அறிமுகப்படுத்தியுள்ளோம்.

Khomba Baby Soap (கொஹொம்ப பேபி சோப்) ஆனது, வேம்பு (கொஹொம்ப), தேங்காய்ப் பால், கற்றாழை, மரமஞ்சள், ஆனைக்கொய்யா, மரமஞ்சள் போன்ற இயற்கை யின் சிறந்த அருட்கொடைகளை கொஹொம்ப பேபி கொண் டுள்ளது. இவை சருமத்தை தூய்மைப்படுத்தவும், ஈரப்பதனை பேணவும், மென்மையான மற்றும் குழந்தையின் லேசான தோலை பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

கொஹொம்பா பேபி சவர்க்காரம் சருமத்தில் ஈரப்பதத்தைப் பாதுகாப்பதோடு, மென்மையான மற்றும் குணப்படுத்தும் தன்மை கொண்டது. புதிய Khomba Baby Milk Soap ஆனது, வேம்பு (கொஹம்ப) உடன் தேங்காய்ப் பால் மற்றும் கற்றாழை ஆகியவற்றை உள்ளடக்கியுளளது. Khomba Baby Venivel Soap ஆனது, வேம்பு (கொஹம்ப) உடன் மரமஞ்சள், தேன், பாதாம் எண்ணெய் சேர்க்கப்பட்டது. Khomba Baby Avocado Soap ஆனது, வேம்பு (கொஹம்ப) உடன் ஆனைக்கொய்யா மற்றும் ஒலிவ் எண்ணெய் சேர்க்கப்பட்டது. Khomba Baby Rathmal Soap ஆனது, வேம்பு (கொஹம்ப) உடன் மரமஞ்சள் மற்றும் ஒலிவ் எண்ணெய் சேர்க்கப்பட்டது. இந்த சவர்க்காம் வெள்ளை, சார்ந்த வெள்ளை, இளஞ்சிவப்பு, பச்சை ஆகிய ஐந்து வண் ணங்களில், புதிய கவர்ச்சிகர மான பொதியில் கிடைக்கிறது.

வேம்பு (கொஹம்ப), குழந்தையின் சரு மத்தை கிருமிகளிலிருந்து இயற்கையாக பாது காக்கிறது. தேங்காய்ப் பால், சருமத்தில் ஈரப்பதனை பேணி மென்மையாகவும் மிருதுவாகவும் வைக்கிறது. பேபி சோப்பில் தேங்காய் கிரீம் பயன்படுத்துவதன் மூலம் வெறு மனே ஈரப்பதன் என்பதையும் தாண்டிய நிலை பேணப்படுகின் றது. தேங்காய்ப் பால் கிரீம் தோலில் வரட்சி, அரிப்பு, வீக்கம், சிவத்தல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதுடன், சருமத் திற்கு ஆறுதலளிக்கிறது. அத்துடன் குழந்தைகளுக்கு ஆரோக் கியமான, சருமத்தை பேண உதவுகிறது. பண்டைய காலங்க ளில் இலங்கைத் தாய்மார் பல நூற்றாண்டுகளாக குழந்தை களை பால் குளியலில் ஈடுபடுத்தியுள்ளனர் என்பது சான்றா கும்.

கற்றாழை, சருமத்தை ஈரப்பதத்துடன் வைக்கிறது. இக்சோரா மலர் குழந்தையின் சருமத்தை மென்மையாகவும் குளிர்ச்சியாகவும் வைத்திருக்கும். ஒலிவ் எண்ணெய் மற்றும் பாதாம் எண்ணெயில் உள்ள இயற்கையான விற்றமின் E, குழந்தையின் தோலுக்கு போசணையை அளிக்கிறது. தேன், குழந்தையின் சருமத்தை பக்டீரியா/ பங்கசுக்களின் தொற்று களில் இருந்து பாதுகாக்கிறது. ஆனைக்கொய்யா, குழந்தை யின் சருமத்திற்கு ஈரப்பதனை வழங்குவதுடன் போசணையை யும் அளிக்கிறது. மரமஞ்சள், கிருமி நீக்கம் செய்து குழந்தை யின் சருமத்திற்கு ஆறுதலளிக்கிறது.

கொஹொம்ப பேபி சோப் ஆனது, குழந்தையின் சருமத்தில் ஏற்படும் ஒவ்வாமைகளிலிருந்து பாதுகாப்பதுடன் சருமத்திற்குத் தேவையான போசணையை அளிக்கிறது. சிறந்த மூலிகைக் கலவையுடன் தயாரிக்கப்பட்டு உள்ளூர் சந்தையில் உள்ள ஒரேயொரு மூலிகைகள் கொண்ட குழந் தைகளுக்கான சவர்க்காரம் இதுவாகும். அத்துடன் சருமத் திற்கு மென்மையான, புதிய இனிமையான நறுமணங்களுடன் அது தற்போது மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. குழந்தையின் சருமத்தை சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும், மென்மையா கவும், மிருதுவாகவும், ஈரப்பதமாகவும் பேணும் மீள் அறிமுகம் செய்யப்பட்டுள்ள Khomba Baby குழந்தை பராமரிப்பு தயா ரிப்புகள் குழந்தைக்கு ஆரோக்கியத்தையும் சுகத்தையும் தருகிறது என சுதேஷி நிறுவனம் தெரிவிக்கின்றது.

இத்தாயரிப்புகளின் பிரதான மூலப்பொருளான வேம்பு (கொஹொம்ப), பல நூற்றாண்டுகளாக இலங்கைத் தாய்மார்களால் பயன்படுத்தப்பட்டு வரும் மூலிகை மூலப்பொ ருளாகும். அத்துடன், 80 ஆண்டுகளுக்கும் மேலாக மூலி கைகளைக் கொண்ட தனிநபர் பராமரிப்பு தயாரிப்பு நிபுணரான சுதேசி, இந்த மூலிகைகளை கவனமாக தேர்ந்தெடுத்து, தாயின் அன்பின் நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில், உயர்ந்த தரத்துடன் சிறந்த மூலிகை தயாரிப்புகளாக உங்க ளிடம் கொண்டு சேர்க்கிறது. உங்களுக்கு வழங்கி வருகின்றது. இந்த மூலிகைகளின் கலவைகள், பாரம்பரியமாக குழந்தை களை குளிப்பாட்டி இயற்கையாகவே கிருமிகளை நீக்கம் செய் வதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் இந்த மூலிகை மூலப்பொருட்களை சருமத்தில் பயன்படுத்துவது எப்போதும் பாதுகாப்பானதாகவும் மிருதுவானதாகவும் அமை கிறது. "இலங்கையின் முன்னணி மூலிகை தனிநபர் பராமரிப்பு தயாரிப்புகளின் உற்பத்தி நிறுவனம் எனும் வகையில், சுதேசி அதன் அனைத்து தயாரிப்புகளிலும் பயன்படுத்தப்படும் மூலி கைப் பொருட்களின் செயற்பாட்டு நன்மைகள் தொடர்பில் நுகர்வோர் மேலும் அறிந்து கொள்ள வேண்டுமென விரும்பு கிறது. நாங்கள் இலங்கையின் சிறந்த மூலிகைகளை மட்டுமே பயன்படுத்துகிறோம் என்பதுடன், பயன்படுத்தப்படும் அனைத்து மூலப்பொருட்களும் விரிவாக ஆய்வுக்குள்ளாக் கப்படுகின்றன, தயாரிப்புகளின் தரத்தை உறுதி செய்வதற்காக முழுமையாக சோதனைக்கு உள்ளாக்கப்படுவதுடன், எமது தயாரிப்புகள் யாவும் 100% சைவத்தை அடிப்படையானது. அவை விலங்குகள் மீது சோதிக்கப்படவில்லை என்பதுடன் விலங்குகளின் கொடுமைகளிலிருந்து விலக்கற்றவை. சுதேஷி கொஹொம்ப, ராணி சந்தனம், சுதேஷி கொஹொம்ப பேபி உள்ளிட்ட சுதேசி தயாரிப்புகள் யாவும் இங்கிலாந்தின் Vegetarian Society, UK யினது அங்கீகாரம் பெற்றவை. இந்த உறுதிமொழியானது, நிறுவனத்தின் முன்னோக்குசிந்த னை களின் நடைமுறைகளுக்கு சான்றாக அமைவதுடன், இது நுகர்வோருக்கு நெறிமுறை ரீதியானதும் சூழல் நட்புரீதியான துமான தெரிவுகளை மேற்கொள்ளவுமான எமது விருப்பத்தையும் காண்பிக்கிறது. நிறுவனம் எப்போதும் தனது தயாரிப்புகளில் ஆரோக்கியம் மற்றும் சூழல் தாக்கம் தொடர் பில் கருத்தில் கொள்வதோடு, தொடர்ந்தும் அவற்றிற்கு முன் னுரிமையளிக்கின்றது. மிக உயர்ந்த தரம் வாய்ந்த உள்நாட்டு தயாரிப்புகளை சந்தைக்குக் வழங்குவதானது, நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) தொடர்பிலான முதலீட் டின் சிறந்த பிரதிபலிப்பாகும். மேலும் சுதேஷி தொழிற்சாலை யானது ISO 9001 - 2015 தரநிலைகளின் கீழ் சான்றளிக்கப் பட்ட ஒரு முழுமையான ஆய்வுக்கூடத்தையும் கொண்டுள்ளது.

சுதேஷியினால் சந்தைக்கு வழங்கப்படும் முன்னணி வர்த்தகநாமங்களில் சுதேஷி கொஹொம்ப, கொஹொம்ப பேபி, பெல்வைட், லக் பார், சேஃப்பிளஸ், பிளக் ஈகிள் பேர்ஃப் யூம், சுதேஷி ஷவர் ஜெல் ஆகியவை அடங்குகின்றன. முன் னணி மூலிகை சவர்க்கார வர்த்தகநாமமான கொஹொம்ப ஹேர்பல் மற்றும் மிகப் பிரபலம் வாய்ந்த ஒளிரும் முகத்தை வழங்கும் ராணி சந்தனம் ஆகியவற்றையும் நிறுவனத்தின் தயாரித்து சந்தைப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. ■

தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவுக்கு மருந்துகள்!

யாழ்ப்பாணம், பெப். 11

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்று நோய் சிகிச்சைப் பிரிவுக்கு லண்டன் அபயம் அறக் கட்டளையின் நிதிப் பங்களிப்பில் மருந்துகள் வழங் கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு அவசரமாகத் தேவைப் பட்ட ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான மருந்து கள் சிவபூமி அறக்கட்டளையின் கோரிக்கையை அடுத்து லண்டன் அபயம் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டன. (ம-66)

தொற்றா நோய்களுக்கான மருத்துவமுகாம் மன்னாரில்

மன்னார், பெப். 11

மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில், தொற்றாத நோய்களுக்கான மருத்துவமுகாம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் சாய் ஹரிஷ்வரன் தலைமையில் எருக்கலம்பிட்டி பிரதேச மருத்துவமனையில் இந்த மருத்துவமுகாம் முன்னெடுக்கப்பட்டது. மருத்துவர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-213)

நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஏற் பாட்டில், சிறுவர் செயற்பட்டு மகிழ் வோம் நிகழ்வு நெடுந்தீவு யுவானி ஆலய முன்றலில் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது. (ம-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலை...

உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு உயர் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, லக்ஷ்மன் கிரியெல்ல, அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதே உயர் நீதிமன்றம் தனது முடிவை நேற்று அறிவித்துள்ளது.

திட்டமிட்டபடி தேர்தலை நடத்துவதற்கான தடை ஏதும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இல்லை. சட்டதிட்டங்களின்படி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்த அறிவித்தல் விடுத்து தேவையான நடவடிக்கைகளை எடுத்த நிலையில், அதனை நடத்துவதற்கான எழுத்தாணையை வழங்கவேண்டிய அவசியம் ஏதும் ஏற்படவில்லை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது என்றும் உயர் நீதிமன்றம் தனது அவதானிப்பை வெளிப்படுத்தியுள்ளது. (அ-ம-22)

இந்திய...

சீன அதிகாரிகள் மன்னாருக்கு அண்மைக்காலமாக வந்துசெல்கின்ற பின்னணியில் இந்திய அமைச்சர்கள் குழுவும் அங்கு சென்ற விடயம் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

யாழ்ப்பாண கலாசார மையத்தைக் கையளிப்பதற்காக இந்திய அமைச்சர்கள் மற்றும் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியினரைக் கொண்ட குழுவினர் பலாலி விமான நிலையத்தினூடாக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். அவர்கள் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுவரும் மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டனர். அத்துடன், மன்னார் கடற்படைத் தளத்துக்கும் அவர்கள் சென்றனர். மன்னாரில் நடைபெற்ற பெண் தலைமைக் குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்விலும் அவர்கள் கலந்துகொண்டனர். (அ-ம)

கிணற்றுக்குள்...

புதுமனைப் புகுவிழாவொன்றுக்குச் சமைப்பதற்காகச் சென்ற வேளையிலேயே அவர், பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

13ஆம் திருத்தம்...

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகப் பௌத்த தேரர்கள் தற்போது வீதிகளில் இறங்கியுள்ளனர். உண்மையில் இந்தச் சட்டத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் தெளிவில்லாத காரணத்தாலேயே பௌத்த தேரர்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். நாட்டை எவரும் இனி தீவைத்துக் கொளுத்தமுடியாது. நாட்டைப் பின்னகர்த்தமுடியாது. வீதிகளில் இறங்கியுள்ள தேரர்களுக்கு மகாநாயக்க தேரர்கள் வழிகாட்டவேண்டும், அவர்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தவேண்டும். இது தொடர்பில் எமது சக எம்.பி. சம்பிக்க ரணவக்கவும் கவனம் செலுத்தவேண்டும்.

நாடு அதலபாதாளத்தில் இருந்து மீண்டெழ வேண்டுமெனில் அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியமானது - தேவையானது. 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது புதிய தொரு சட்டம் அல்ல. இது ரணில் கொண்டு வருகின்ற சட்டம் அல்ல. சஜித் கொண்டு வருகின்ற சட்டம் அல்ல. அநுரகுமார கொண்டுவருகின்ற சட்டம் அல்ல. இந்தச் சட்டம் ஏற்கனவே எமது நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு நாட்டின் அரசமைப்பில் இருக்கின்ற சட்டமாகும். இது புதியதொரு சட்டம் அல்ல. எனவே, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்' - என்றார். (அ-ம-22)

தமிழரசுவின்...

செய்யப்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழு முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபணைகளைக் கருத்திற்கொண்டு மனு நிராகரிக்கப்படுகின்றது என்று உயர்நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் அறிவித்தது.

முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அதிகாரி, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு தமிழரசுக் கட்சி இந்த மனுவைத்தாக்கல்செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

சுதந்திரதினக்...

யாழ் .பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே போராட்டத்துக்கான இந்த அழைப்பை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலில் இன்று நண்பகல் 12 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் பங்கேற்று போராட்டத்தைப் பலப்படுத்தவேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-ம-26)

500 மீற்றருக்கு...

களிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் போராட்டங்கள் மேற்கொள்ளத் தடையில்லை என்றும் நீதிமன்றம் அறிவித்தது.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்வைத்த விண்ணப்பத்துக்கு அமையவே இந்தத் தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் இன்று நடைபெறும் சுதந்திரதின விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார். இந்த நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் தனித்தனியாக அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் முன்னணியினரின் போராட்டத்துக்கு தடையுத்தரவு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி க.சுகாஷ், வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்தத் தடை உத்தரவு கோரப்பட்டது. யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் பொலிஸாரின் விண்ணப்பத்தை முகத்தோற்றளவில் ஏற்று தடைக் கட்டளையை வழங்கினார்.

'ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நடத்துவது மக்களின் உரிமை, அதை தடைசெய்யமுடியாது. ஆனால், யாழ்ப்பாண கலாசார மத்திய நிலைய திறப்புவிழா மற்றும் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொள்ள வரும் பிரமுகர்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு நிகழ்வுகள் நடைபெறும் இடத்திலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப்படுகின்றது. அதற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளுக்குத் தடையில்லை' என்றும் நீதிவான் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ம-26-110-125)

தடைகோரிய...

உயர் நீதிமன்றத்தால் நேற்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் உயர் நீதிமன்றத்தில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் குறித்த மனுதொடர்பில் அடிப்படை ஆட்சேபணைகளை முன்வைத்தார். எழுத்தாணை மனுவில் மனுதாரர்கள் தொடர்பில் உரிய விடயங்கள்சமர்ப்பிக்கப்படவில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

மனுதாரர் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வாக்காளரா என்பது தொடர்பிலும் மனுவில் தெரிவிக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார். அதற்கமைய, குறித்தஎழுத்தாணை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது தள்ளுபடி செய்யுமாறு ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து, நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரில் புள்ளே மன்றில் முன்னிலையாகி விடயங்களைச் சமர்ப்பித்தார்.

நாடு பொருளாதரர நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள சூழ்நிலையில், அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது என நிதி அமைச்சின் செயலாளரால் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரில் புள்ளே மன்றுக்கு அறிவித்தார். இந்நிலையில், குறித்த எழுத்தாணை மனு மீதான பரிசீலனையை எதிர்வரும் 23ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (அ-ம-22)

ரணிலுக்கு...

கொக்குவிலிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட, முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் இந்த அழைப்பை விடுத்துள்ளார். யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இன்று பிற்பகல் 3 மணிக்கு ஒன்றுகூடுமாறும் முன்னணி மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-26)

சுற்றுலாவை...

தொடர்பில் கலந்துரையாடுவதற்காக யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று மாலை 4 மணிக்கு அரச அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை ஜனாதிபதி ஏற்பாடு செய்திருந்தார். இந்தக் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் இதுவரை பெற்ற கடன்களை மீளச்செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த வருடமும், இனிவரும் சில வருடங்களும் கடன்களைப் பெறவேண்டியும் இருக்கிறது. இருக்கிற கடனையும், இனிப் பெறப்போகும் கடனையும் அடைக்க வேண்டிய தேவை இருக்கிறது. எனவே இன்று நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலையில் இருந்து நாங்கள் மீண்டெழ வேண்டுமென்றால் பத்து வருடத்துக்கான அபிவிருத்தித் திட்டம் அவசியமானதாகும்.

எனவே ஒரு ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவது பற்றி நாங்கள் சிந்திக்கிறோம். மிகவும் போட்டித்தன்மை மிக்க ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டிய தேவை இருக்கிறது. நாங்கள் இதற்கென சில மாகாணங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த மாகாணங்களில் வடக்கு மாகாணமும் ஒன்று. இந்த விடயங்களை நாம் முன்னெடுத்துவரும்போது வடக்கின் பொருளாதாரம் மிகவும் உயர்ந்த நிலையை அடையும். வடக்கு, வடமத்தி மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே நாங்கள் அபிவிருத்தி சார்ந்து மிக முக்கியமாக கவனம்செலுத்துகிறோம். விவசாயத்தை முன்னேற்றுவது எமது திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். கிளிநொச்சியிலிருந்து குமண வரை நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஒரு ஏக்கரில் இருந்து ஏழு மெற்றிக் தொன் அறுவடையைப் பெற்றுக்கொள்வது எங்களுடைய இலக்காகும். இதற்காக நவீன தொழில்நுட்பத்தை உள்வாங்க வேண்டிய தேவை உள்ளது. வடக்கில் நெல் உற்பத்தியை மேற்கொண்டால் ஏனைய பகுதிகளில் ஏற்றுமதி சார் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் அடுத்து வரும் பத்தாண்டுகளுக்குள் உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத்தையும், கடற்றொழிலையும் மேம்படுத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இந்திய மீனவர்களால் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் இழுவைமடிப் படகுப் பிரச்சினைக்கும் அமைச்சர்களுடன் கலந்துரையாடி விரைவில் தீர்வைப் பெற்றுத்தர இருக்கிறோம். வடக்கு மாகாணத்துக்கு மல்வத்து ஓயாவில் இருந்து நீரைக் கொண்டு வருவதற்கான திட்டமொன்றையும் நாங்கள் வைத்திருக்கிறோம். அத்துடன் ஆனையிறவு களப்புப் பகுதியில் உவர் நீரில்லாமல் நன்னீரைத் தேக்கி வைப்பதற்கான திட்டம் ஒன்றும், பூநகரி குளத்தையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

மேலும், திருகோணமலையில் இருந்து மன்னார் வரை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கும், வடக்கிலுள்ள இந்து ஆலயங்களுக்கு இந்தியாவிலிருந்தும், மலேசியாவிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கும், புதிய ஹோட்டல்களை அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம். மாற்று வலுமின் உற்பத்தித் திட்டங்களும் இருக்கின்றன. அத்துடன் கடற்பகுதியில் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் உயிர் வாயு உற்பத்தி பற்றியும் ஆராய்ந்து வருகிறோம். இதன் மூலம் நாட்டிலுள்ள பசுமை சக்தி உற்பத்தித் தேவைக்கு வடக்கு மாகாணம் பங்களிக்கும் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்ப்பாணம், மேலைத்தெல்லியூர் விழிசிட்டி, வீமசிட்டி சிவகுருநாத சுவாமி ஆலய தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருவிழாவில் இன்று தேர்த்திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 11

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் திருக்கோவில் கும்பாபிஷேக தின நவோத்திர சகஸ்ரசங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பஞ்சமுக விநாயகருக்கு திருவூஞ்சல்பா இசைத்து சுவாமி திருவீதி உலாவரும் திருக்காட்சி இடம்பெறுமென ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ம)

நிகழ்வை...

இடையே கருத்துமுரண்பாடுகள் நீண்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில் கலாசார மண்டபத்தைக் கையளிக்கும் நிகழ்வில், யாழ்ப்பாணம் மாநகரசபை திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதாகவும், நிகழ்வின் நன்றியுரை மாநகரசபைக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில் அது இறுதிநேரத்தில் மாற்றப்பட்டுள்ளது என்றும் மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இன்று காலை யாழ்ப்பாணம் பண்ணை சுற்று வட்டப் பகுதியில் ஜனாதிபதியின் பங்கேற்புடன் மரநடுகை நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

இதில் மாநகர முதல்வர் ஆர்னோல்ட்டும் பங்கேற்கவுள்ளார்.

இந்த மர நடுகை நிகழ்வில் வைத்து கலாசார நிலையத்தைக் கையளிக்கும் நிகழ்வில் யாழ். மாநகரசபையின் காத்திரமான பங்கேற்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று முதல்வர் கோரிக்கை விடுக்கவுள்ளார் என்றும், அந்தக் கோரிக்கை செவிமடுக்கப்பட்டால் நிகழ்வில் மாநகரசபை கலந்துகொள்ளும் என்றும் அல்லாவிடால் புறக்கணிக்கும் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-26)

கட்டடம் வாடகைக்கு

2400 சதுர அடி, 2ஆம் மாடிக் கட்டடம் 206/2, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தில் உள்ளது. (CDB வங்கிக்கு மேல்)

077 360 9005 (C8/23256) 4/6

Chemistry (இரசாயனவியல்)

Organic Chemistry (சேதன இரசாயனம்) மற்றும் Physical Chemistry (பௌதிக இரசாயனம்) தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் தனி அல்லது குழு அல்லது Zoom மூலம் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 910 1195

பணிப்பெண் தேவை

மானிப்பாய் நவாலியில் வீட்டுவேலைகள் செய்வதற்கு 35-45 வயதிற்கு இடைப்பட்ட நேர்மையாக வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 0777 888 325

பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்), பணிநிலைக்குரிய பணியாளர் தேவை. தகுதியுடையோர் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு : 077 6491 027

கடை வாடகைக்குத் தேவை

பேக்கறி சார்ந்த உணவு உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு சாவகச்சேரி நகரத்திற்குள் கடை ஒன்று தேவைப்படுகின்றது.

077 144 5701

வேலையாள்கள் தேவை

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் T.O (இரண்டு வருட அனுபம்)
2. கணிய அளவையியலாளர் Q.S
3. பயிலுநர் (Trainee)

077 958 3944

E.Mail: Sshaganaconstruction@hotmail.com

பணிப்பெண் தேவை

கிளிநொச்சியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு சமையல் மற்றும் துப்புரவு வேலைகளுக்கு வீட்டுப்பணிப் பெண் தேவை. (22360) (4/6)

074 003 6759, 070 368 9600

கணித பாட ஆசிரியர் தேவை

தரம் 6 - 8 வகுப்பு மாணவர்களுக்கு கணிதபாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

வைகுறோ,
உடுவில் வீதி, மானிப்பாய்.

077 711 2261

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்

புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்

2023 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை

பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)

பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15

விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்

தரம் 3, தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 12.02.2023

பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" | 0775388471 0773126807

தேவை

கோண்டாவிலில் இயங்கி வருகின்ற பிரபல மருத்துவப் பொருட்கள் விநியோகிக்கும் நிறுவனத்துக்குப் பெண் அலுவலர்கள் உடன் தேவை.

- A/L பரீட்சை முடித்தவர்களுக்கு முன்னுரிமை.
- நேர்முகத் தேர்வுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

077 284 9686

வீடு விற்பனைக்கு

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோவில் தெற்குபுறம் சகல வசதிகளுடன் கூடிய தரமாகவும்,

- அழகாகவும்
  1. கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய வீடும்
  2. கட்டப்பட்டுக் கொண்டிருப்பதுமான புதிய மேல்மாடி வீடும்

உத்தரவாதத்துடன் நியாயமான முறையில் விற்பனைக்கு உண்டு. இவ் வீடுகள் விலை தொடர்பில் சில தரகர்களால்

- தவறான தகவல்கள் பெற்றுள்ளவர்களும் நேரில் தொடர்பு கொள்ளலாம்

தொடர்பு: 077 958 3944

குத்தகைக்கு / வாடகைக்கு

யாழ்.குருநகர் பற்றிக்ஸ் வீதியில் 800 சதுரஅடி கொண்ட ஃபூட் சிற்றி அனைத்துப் பொருட்களுடனும் வாடகைக்கு / குத்தகைக்கு விடப்படும்.

076 855 6300
077 053 5121

துயர்பகிர்தல்

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

ஜோசப் அனோஜன்

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவனும், DHL WHARE HOUSE SUPERVISOR உம்)

கடந்த (05.02.2023) அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பற்றிக் செபமாலை, இரத்தினம் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புப் பேரனும், ஜோசப் (சுகாதார பாதுகாவலர், யாழ். மாநகர சபை) கௌசல்யா ஆகியோரின் பாசமிகு மகனும், டர்சிகா (பேராதனை பல்கலைக்கழகம் 3ஆம் வருடம்), சனூஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தம்பியும், (ரமேஸ், தர்சினி), (ராகவன், ராகினி), (ரஞ்சித்குமார், பேபிரேக்கா-லண்டன்), (ராஜேஸ்வரன் குகநந்தினி- பிரான்ஸ்), ரகுநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும், (சரண்ஜா, லதீஷன்), (சதுர்சிகா), (டிலக்சிகா, நந்தனா, நேந்திரன் (லண்டன்), தக்சித் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மச்சானும் ஆவார்.

தகவல்:
துயருடன் பாசமிகு மாமன்மார்கள்

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இடத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org